# INTERNATIONAL INDIAN SCHOOL – DAMMAM

## FIRST TERMINAL EXAMINATION (2017-18)

**CLASS :- VIII** **DURATION – 3 HOURS**

**SUBJECT :- TAMIL** **MAX.MARKS – 80**

நேரம் - 3 மணி தமிழ் - எட்டாம் வகுப்பு மதிப்பெண்கள் - 80

---

**The Question Paper is divided into four Sections.**

இக்கேள்வித்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

**Section :- A Reading (Comprehension)** **10 Marks**

பிரிவு :-அ படித்தல் (உரைநடைப்பகுதி) 10 மதிப்பெண்கள்

**Section :- B Writing** **15 Marks**

பிரிவு :-ஆ எழுதுதல் 15 மதிப்பெண்கள்

**Section :- C Grammar** **15 Marks**

பிரிவு :-இ இலக்கணம் 15 மதிப்பெண்கள்

**Section :- D Literature & Text Books** **40 Marks**

பிரிவு :-ஈ இலக்கியம் & தமிழ்ப்பாட நூல்கள் 40 மதிப்பெண்கள்

---

## <u>பிரிவு-அ</u>

<u>அ. கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து, கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடையளிக்க :-</u> 5 x 1= 5

மிசோரம் என்ற மாநிலம் , 21 ஜனவரி 1972 –ம் ஆண்டு, நமது முன்னால் பிரதம மந்திரி , காலம் சென்ற இந்திரா காந்தி அவர்களால் தனி மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்னால் அஸ்ஸாம் என்ற மாநிலத்தோடு இணைந்திருந்தது. முன்பு மிசோரம் மிஸாயி என்று அழைக்கப்பட்டது. மிஸாயி என்பது ஒரு வகுப்புப் பிரிவினரின் பெயராகும். மிசோ என்பதன் பொருள் மலை மனிதன் என்பதாகும். முன்பு இவர்கள் சாயிலோ என்பவரின்

ஆட்சிக்கு உட்பட்டிருந்தார்கள். பல தொல்லைகளை அனுபவித்தார்கள். 1895 –ம் ஆண்டு ஆங்கிலேயர் , அஜ்வால் என்பவரை ஜில்லாவின் முக்கிய மனிதராக்கினார். தங்களுடைய பண்பாடுகளை அழிப்பதற்கான சூழ்ச்சியாக நினைத்து அவரை எதிர்த்துப் புரட்சி செய்தனர். தங்களுக்கு தனி மாநிலம் வேண்டுமென்று கேட்டனர். இந்தியா சுதந்திரம் அடைந்தபின் , பல ஆண்டுகளுக்குப் பிறகு 20 பிப்ரவரி 1972-ம் ஆண்டு அது தனி மாநிலத் தகுதியைப் பெற்றது.

<u>வினாக்கள் :-</u>

1. மிசோரம் முன்பு இம்மாநிலத்தோடு இணைந்திருந்தது.

அ. மத்தியபிரதேசம் ஆ. உத்தரபிரதேசம் இ. அஸ்ஸாம் ஈ. காஷ்மீர்

2. மிசோரம் இவரால் தனி மாநிலமாக அறிவிக்கப்பட்டது.

அ. ஜவஹர்லால் நேரு ஆ. இந்திரா காந்தி இ. ராஜீவ் காந்தி ஈ. மன்மோகன்சிங்

3. மிசோ என்பதன் பொருள் -

அ. மலை மனிதன் ஆ. மர மனிதன் இ. குகை மனிதன் ஈ. நில மனிதன்

4. அஜ்வால் என்பவரை ஜில்லாவின் முக்கிய மனிதராக அறிவித்தவர்

அ. இந்தியர் ஆ. ஜப்பானியர் இ. அமெரிக்கர் ஈ. ஆங்கிலேயர்

5. மிசோரம் தனி மாநிலமாக அறிவிக்கப்பட்ட ஆண்டு

அ. 1972 ஆ. 1895 இ. 1985 ஈ. 1792

<u>ஆ. பின்வரும் பத்தியைப் படித்து , கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க :-</u> 5 x 1= 5

தமிழகத்து உணவு தொன்றுதொட்டு மருத்துவ முறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்கு புழுங்கல் அரிசியே ஏற்றது. அன்றாட சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள் , நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி , பித்தத்தைப் போக்கும். சீரகம் வயிற்றுச் சூட்டைத் தணிக்கும். மிளகு , தொண்டைக்கட்டைப் போக்கும். பூண்டு மற்றும் பெருங்காயம் வளியை வெளியேற்றும். இஞ்சி , பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியையும் , அறிவுத் தெளிவையும் உண்டாக்கும். உடலுக்கு வலுவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது.

வினாக்கள் :-

1. நமது நாட்டுச் சமையலுக்கு எவ்வகை அரிசி ஏற்றது ?

2. தொண்டைக்கட்டை நீக்கும் பொருள் எது ?

3. நல்லெண்ணெயின் தன்மை (குணம்) என்ன ?

4. வலியை வெளியேற்றும் பொருள்கள் யாவை ?

5. கீரையின் பயன் யாது ?

## பிரிவு-ஆ

அ. களவுபோன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல்துறை ஆய்வாளருக்குக் கடிதம் எழுதுக. 1 x 7= 7

ஆ. கீழ்க்காணும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை எழுதுக. 1 x 8= 8

1. விலங்கியல் பூங்கா

2. நீ சென்று வந்த சுற்றுலா

## பிரிவு-இ

இலக்கணம் :- 15 x 1=15

அ. தகுந்த சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

1. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

அ. பெறுதல் ஆ. பெறு இ. பேறு ஈ. பெற்றான்

2. காலவாகு பெயர்

அ. மல்லிகை சூடினாள் ஆ. சித்திரை வந்தாள்

இ. வறுவல் தின்றாள் ஈ. நீலம் சூடினாள்

3. பெயர் திரிசொல்

அ. கப்பல் ஆ. வினவினான் இ. எயிறு ஈ. கமலம்

ஆ.பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக :-

4. வழக்கு ______________ வகைப்படும்

அ. இரண்டு ஆ. நான்கு இ. ஆறு ஈ. எட்டு

5. முதலாகு பெயர் என்பது __________________ ஆகும்.

அ. இடவாகு பெயர் ஆ. காலவாகு பெயர்

இ. பொருளாகு பெயர் ஈ. தொழிலாகு பெயர்

6. கமலம் என்பது ________________

அ. இயற்சொல் ஆ. திரிசொல் இ. திசைச்சொல் ஈ. வட சொல்

இ. அடைப்புக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

7. ஓட்டம் (எவ்வகைத் தொழிற்பெயர்?)

அ. விகுதி பெற்ற தொழிறபெயர் ஆ. முதனிலைத் தொழிற்பெயர்

இ. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஈ. எதுவுமில்லை

8. கோவை (மரூஉ நீக்கி எழுது)

அ. கோவில்பட்டி ஆ. கோயம்புத்தூர் இ. கோயம்பேடு ஈ. கோட்டார்

9. பொன்னை பறி (எவ்வகை வழக்கு)

அ. மரூஉ ஆ. இடக்கரடக்கல் இ. குழூஉக்குறி ஈ. மங்கலம்

ஈ. தகுந்த இலக்கணக் குறிப்பைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-

10. கடல்

அ. பெயர் திரிசொல் ஆ. பெயர் இயற்சொல்

இ. வினை திரிசொல் ஈ. வினை இயற்சொல்

11.விளக்கைக் குளிர வை

அ.மங்கலம் ஆ.இலக்கணப்போலி இ.குழூஉக்குறி ஈ.மரூஉ

12.ஊரே வியந்தது

அ.சினையாகு பெயர் ஆ.காலவாகு பெயர்

இ.இடவாகு பெயர் ஈ.பண்பாகு பெயர்

<u>உ.சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-</u>

13.அ.ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயர் குழூஉக்குறி.

ஆ.ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயர் மங்கலம்

இ.ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயர் மரூஉ

ஈ.ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயர் இலக்கணப்போலி

14. அ.முதலாகு பெயர் என்பது பண்பாகு பெயர் ஆகும்.

ஆ.முதலாகு பெயர் என்பது பொருளாகு பெயர் ஆகும்.

இ.முதலாகு பெயர் என்பது காலவாகு பெயர் ஆகும்.

ஈ.முதலாகு பெயர் என்பது சினையாகு பெயர் ஆகும்.

15. அ.ஆகுபெயர் பதினெட்டு வகைப்படும்.

ஆ.ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

இ.ஆகுபெயர் பத்து வகைப்படும்.

ஈ.ஆகுபெயர் ஆறு வகைப்படும்.

## பிரிவு-இ

அ.பொருள் கூறுக:- (மூன்று மட்டும்) 3 x 1= 3

1.தகைசால் 2.ஆவணம் 3.மடவாள் 4.சேய்

ஆ.எதிர்ச்சொல் எழுதுக:- (மூன்று மட்டும்) 3 x 1= 3

1.விருப்பு 2.புகழ் 3.அணி 4.சுருக்கமாய்

இ.பிரித்து எழுதுக :- 2 x 1= 2

1.அருந்தமிழ் 2.நன்கணியர்

ஈ.கோடிட்ட இடத்தை நிரப்புக :- 2 x 1= 2

1.குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் ____________________

2.பதினெண் என்பதன் பொருள் ________________________

உ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :- 5 x 1= 5

1.உ.வே.சா.அவர்கள் கொடுமுடிக்குச் செல்லக் காரணம் -

அ.நண்பரைக் காண ஆ.ஓலைச்சுவடிகளைப் பெற

இ.திருமண நிகழ்ச்சிக்காக ஈ.வணிகம் செய்ய

2.நான்மணிக்கடிகையின் ஆசிரியர் -

அ.உ.வே.சாமிநாதர் ஆ.கபிலர்

இ.விளம்பி நாகனார் ஈ.சமண முனிவர்கள்

3.சேய் என்பதன் பொருள் -

அ.தொலைவு ஆ.அருகில் இ.வயல் ஈ.நட்பு

4.உ.வே.சா.அவர்கள் என் சரிதம் தொடரை எழுதிய இதழின் பெயர் -

அ.நக்கீரன் ஆ.குமுதம் இ.துக்ளக் ஈ.ஆனந்த விகடன்

5.குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள பூக்களின் எண்ணிக்கை –

அ. தொண்ணூற்று ஆறு ஆ. தொண்ணூற்று நான்கு

இ. தொண்ணூற்று ஒன்பது ஈ. தொண்ணூற்று ஏழு

<u>ஊ. எவையேனும் நான்கனுக்கு குறுகிய விடையளி :-</u> 4 x 2= 8

1. உ.வே.சா. ஏன் கொடுமுடிக்குச் சென்றார் ?

2. உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த நூல்கள் சிலவற்றை எழுதுக.

3. நாலடியார் கருத்துப்படி நன்மை செய்வோர் எதைப் போன்றவர் ?

4. நான்கு மணிகள் போல் விளங்கும் கருத்துகள் யாவை ?

5. உ.வே.சா. அவர்களின் இயற்பெயர் யாது ? அவர் பிறந்த ஊர் எது ?

6. குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியர் யார் ? அந்நூலில் இடம்பெற்றுள்ள பூக்களின் எண்ணிக்கை யாது ?

<u>எ. ஏதேனும் ஒன்றனுக்கு விரிவான விடையளி :-</u> 1 x 5= 5

1. நல்லார் நட்பினை பெறுதல் பற்றி நாலடியார் கூறுவன யாவை ?

2. குறிஞ்சிப்பாட்டைப் பதுப்பிக்க உ.வே.சா. எடுத்துக்கொண்ட முயற்சியினை எழுதுக.

<u>ஏ. அடிமாறாமல் எழுதுக :-</u> 4 +1 =5

"தாய்க்கால்" எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதி ,ஆசிரியர் பெயரையும் எழுதுக.

அல்லது

"மனைக்கு" எனத் தொடங்கும் நான்மணிக்கடிகை பாடலை எழுதி ,ஆசிரியர் பெயரையும் எழுதுக.

<u>ஐ. பின்வரும் தலைப்பிலுள்ள துணைப்பாடப் பகுதியை எழுதுக.</u> 1 x 7= 7

எது பெரிய உண்மை ?

***************